பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 07 | புதன்கிழமை | 20.06.2024 | அதிர்வு 324

## நீர்வேலி விபத்தில் இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 06▶




# தம் பதவி நீடிப்புக்காகவே ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தை ஓரம்கட்டும் நகர்வு

## அவரின் கரவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று அப்படியே போட்டுடைத்தார் சுமந்திரன்

"சட்டமூலங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களை நாடாளுமன்றம் பின்பற்றத் தேவையில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திலேயே கூறியிருக்கின்றமை மிக மிக ஆபத்தான விவகாரம். தமது பதவிக் காலத்தை நீடிப்பதற்காக அவர் நகர்த்தவிருக்கும் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் முடிவு தமக்குச் சாதகமாக வராவிட்டால் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தைப் புறமொதுக்கி, தமது பதவி நீடிப்பை மேற்கொள்ள அவர் கரவாகத் திட்டமிடுகின்றார். அதற்கான பூர்வாங்க ஆயத்த நடவடிக்கையாகவே உயர்நீதிமன்ற முடிவைப் புறக்கணித்து சட்டமாக்கலாம் என்ற அவரின் நேற்றைய (செவ்வாய்) நாடாளுமன்ற உரை அமைந்துள்ளது."

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். 06▶

## ஊடகரின் வீடு மீது தாக்குதல்: கைதான மூவருக்கும் பிணை!



யாழ். அச்சுவேலியில் ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோயில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது கடந்த வாரம் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது. 06▶



உயர்நீதிமன்றத்தை மீறி, சட்டமாக்கல் தத்துவத்தை நாடாளுமன்றம் தன்னிச்சைப்படி முன்னெடுக்கலாம் என்ற சாரப்பட நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரைதான் இப்போது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பிரதான பேசு பொருள்.

தாம் பதவியில் நீடிப்பதற்காக மோசமான திட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகின்றாரா என்பதுதான் பல அரசியல் தரப்புக்களும் தமக்குள் பேசும் விடயமாகியிருக்கின்றது.

வேறு எந்த அரசு தலைவர்களும் நீதித் துறையை இவ்வளவு காட்டமாக விமர்சித்தவர்கள் அல்லர். 06▶





# கைத்தொழில் துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்படவுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“இலங்கையில் தொழில்துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கியொன்று ஸ்தாபிக்கப்பட உள்ளது. இதன் மூலம் தொழில்துறையினருக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும்.”

–இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் முதன்முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இன்டர்நெசல் இன்டஸ்ரியல் எக்ஸ்போ– 2024 (சர்வதேச கைத்தொழில் கண்காட்சி) நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்நாட்டின் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரன விசேட கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக இந்த தொழில் கண்காட்சியைக் குறிப்பிடலாம். இது நாட்டிலே நடத்தப்படும் மிகப்பெரிய கண்காட்சியாகும்.

கடந்த காலத்தில் நமது நாடு வங்குரோத்தடைந்த நாடாக மாறியிருந்தது. ஆனால் அடுத்த சில வாரங்களில் நாம் வங்குரோத்தடைந்த நாடு என்ற அவப்பெயரில் இருந்து முற்றிலும் விடுபடுவோம். இது தொடர்பான ஒப்பந்தமும் அடுத்த சில வாரங்களில் எட்டப்பட உள்ளது. இதன்மூலம், தனியார் கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எளிதாகிறது. எனவே இந்த பணியை இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்வோம்.

ஆனால் இதில் மட்டும் திருப்தி அடைய முடியாது. இந்தக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் பெற்ற கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு 2042 வரை கால அவகாசம் கிடைக்கும் என நம்புகிறேன்.

இறக்குமதிப் பொருளாதாரம் காணப்படுவதால் இறக்குமதிக்கு பணம் கொடுக்க வேண்டும். அதற்கான அந்நியச் செலாவணி நம்மிடம் இல்லை. அதனால் அவர்கள் மீண்டும் கடன் வாங்க வேண்டும். இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் இன்னும் 15-20 ஆண்டுகளில் மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் நோக்கில் செயல்பட்டு வருகிறோம்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மாறுவதில், உற்பத்திப் பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உருவாக்கப்படும் பொருளாதாரம் போட்டித்தன்மையுடன் டிஜிட்டல் பொருளாதாரமாகவும் இருக்க வேண்டும். மேலும், பூஜ்ஜிய காபன் உமிழ்வு என்ற இலக்கை நோக்கி நகர்வதில் பசுமைப் பொருளாதாரமாக மாற்ற வேண்டும். இந்த கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும்.

முதல் பணியாக, அந்தத் திட்டங்களின்படி தற்போதுள்ள தொழில்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஒரே இரவில் யாராலும் போட்டித்தன்மையை உருவாக்க முடியாது. நமது அண்டை நாடான இந்தியா தற்போது பெரும் கைத்தொழில்துறையில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் இதே வளர்ச்சியைக் கண்டுள்ளன. நாமும் அதனுடன் இணைந்திருக்க வேண்டும். மேலும் இந்த விஷயத்தில் உலகின் மற்ற நாடுகளுடன் இணைந்து செயல்படுவோம் என்று நம்புகிறோம். எனவே, முதலில் செய்ய வேண்டியது தொழில்களை போட்டி நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை வழங்க அபிவிருத்தி வங்கி ஒன்றை நிறுவுவது குறித்து ஆலோசிக்கிறோம். 1960 இல் எம்மிடம் DFCC வங்கி இருந்தது. 1980 இல், NDB வங்கி நிறுவப்பட்டது. தனியார்மயமாக்கலுக்குப் பிறகு, இந்த இரண்டு வங்கிகளும் நம் நாட்டில் பெரிய வணிக வங்கிகளாக மாறிவிட்டன. குறிப்பாக இந்த வங்கிகள் அப்போது இல்லாவிட்டால் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத் திட்டம் வெற்றியடைந்திருக்காது. எனவே, புதிய வங்கியொன்றை தொடங்க எதிர்பார்க்கிறோம்.

அதற்குள் வட்டி விகிதத்தை குறைந்த மட்டத்தில் பேண வேண்டும். மேலும், இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பொருளாதார ஆணைக்குவொன்றும்

தொடர்ச்சி▼
























# கைத்தொழில் துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கி ஸ்தாபிக்கப்படவுள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

ஸ்தாபிக்கப்படும். மற்ற நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" என்ற புதிய அமைப்பை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவன அமைப்பு இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிலதிபர்களுக்காக உருவாக்கப்பட்டது. அடுத்த 5 - 10 ஆண்டுகளில், இதே வழியில் நாம் முன்னேற வேண்டும்.

மேலும், பங்களாதேஷ், மியான்மர் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு உற்பத்தியை மேற்கொள்ள விரும்பினால், எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பைப் பெறலாம். இதுவே எமது கொள்கை. இந்த செயற்பாடுகளின் போது, இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடியுள்ளேன்.

நாட்டில் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கும், பசுமை ஹைட்ரஜனைப் பெறுவதற்கும் இந்தியா ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வடக்கு கடல் பரப்பைக் கொண்டு அந்த நன்மையை அடையவோம். அதன் முதல் படியாக அதானி இலங்கை வந்தார். இதுபோன்று புதிய பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

நாட்டில் சிலர் ஒவ்வொரு விடயத்துக்காவும் நீதிமன்றம் செல்கின்றனர். அதனால் சட்டத்தரணிகள் மட்டுமே பயன் பெறுவார்கள். நீதிமன்றத்திற்கு செல்வதால் மட்டும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. எமது தேசிய கொள்கையின் படி நாம் முன்னேற வேண்டும். இத்தொழில்களின் முன்னேற்றத்திற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை கலந்துரையாடி தயாரிக்குமாறு தொழில் அமைச்சருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் பொருளாதார மாற்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்பித்திருக்கிறோம்." - என்றார்.



# ஜெனீவாப் பரிந்துரைகளைச் செயற்படுத்த இலங்கையை வலியுறுத்திக் கோருகின்றன இணைத்தலைமை நாடுகள்

இலங்கை அரசாங்கம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்சிலின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் என இணைத் தலைமை நாடுகள் தமது அறிக்கையில் கோரியுள்ளன.

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் கவுன்சிலின் 56ஆம் அமர்வில் இலங்கைத் தொடர்பான இணைத் தலைமை நாடுகளின் அறிக்கை நேற்று முன்வைக்கப்பட்டது.

கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மாசிடோனியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய இந்த குழுவின் அறிக்கையில் இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலவந்தமான காணாமல் போதல்களால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதான அதன் தாக்கத்தையும் நிவர்த்தி செய்வதற்கு என அதில் கோரப்பட்டுள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியமானதாகும்.

நீதித்துறை சுதந்திரம், நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து காணிகள் விடுவிக்கப்படுவது வரவேற்கப்படுகின்றது.

அதேவேளை இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பதற்றங்கள், தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து கரிசனைக் கொள்ள வேண்டியுள்ளது.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# பிள்ளைகளுக்கு உகந்த நாட்டை உருவாக்குவேன் என்கிறார் ரணில்

“ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டில் எந்த ஒரு பிள்ளையும் பாதிக்கப்படக் கூடாது என தீர்மானித்துள்ளோம். இரண்டு வருட குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக என்னை அர்ப்பணித்துள்ளேன்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்நாட்டுப் பிள்ளைகளுக்கு இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். முதலில், இந்த உதவித்தொகை பெறுவதற்கு உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் உதவித்தொகை வழங்கப்படும். உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 6,000 ரூபா உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இந்த புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 04 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம்.

கடந்த 3 வருடங்கள் நம் அனைவருக்கும் கடினமான காலமாக அமைந்தது. நாங்கள் அனைவரும் அவதிப்பட்டோம். உணவு இருக்கவில்லை. மாணவர்களுக்கு பாடசாலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி இருக்கவில்லை. இப்போது அந்த நிலைமை இல்லை. ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டின் பிள்ளைகள் துன்பப்படுவதற்கு இடமளிக்காதிருக்க தீர்மானித்தேன். அதன்படி இந்த

தொடர்ச்சி▼

















# பிள்ளைகளுக்கு உகந்த நாட்டை உருவாக்குவேன் என்கிறார் ரணில்



தொடர்ச்சி▲

நாட்டை பொருளாதார ரீதியாக மீட்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க தேவையான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அதன் மூலம் அடுத்த 5-10 ஆண்டுகளில் பிள்ளைகளுக்கான சிறந்த நாட்டை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும்.

கடந்த பொருளாதார நெருக்கடியால், பலர் தங்கள் வருமான வழிகளை இழந்துள்ளனர். அதன்படி, அஸ்வெசும திட்டத்தின் மூலம் 24 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அத்துடன், மக்கள் வாழும் காணியின் சட்ட பூர்வ உரிமையை மக்களுக்கு வழங்க உறுமய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்த மக்களுக்கு அந்த வீட்டின் உரிமை இருக்கவில்லை. எனவே, அரச காணியில் வசித்த, அரசுக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்த, அரச அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்த அனைவருக்கும் அதற்கான உரிமை வழங்கப்படுகிறது. மேலும், நாட்டின் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தி, உங்கள் அனைவருக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மக்களுக்கு வருமானம் அளிக்கவும், உரிமைகளை வழங்கவும் பிள்ளைகளுக்கு கல்வி வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே இப்பிள்ளைகள் இந்த உதவித்தொகையை சரியான முறையில் பயன்படுத்தி தங்கள் கல்வியை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.” – என்றார்.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் இந்தப் போக்கு நீதித் துறை சுயாதீனத்துக்கு வைக்கப்பட்ட ஆப்பு என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனத்தோடு கண்டித்திருக்கின்றது.

நீதித்துறை பிற தலையீடுகள் இன்றி சுயாதீனமாக – சுதந்திரமாக – இயங்க அனுமதிக்கப்பட வேண்டும், அப்படி அனுமதித்தால்தான் நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவும் என்று சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டி இருக்கின்றது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதித் துறையின் போக்கை – சட்டமூலம் ஒன்று தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய முடிவை – காட்டமாக விமர்சிப்பதற்கு 'நீதித் துறையின் நரமாமிசம் புசிக்கும் போக்கு' (Judicial Cannibalism) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி இருந்தார்.

மொழிபெயர்ப்பின் ஊடாக அந்தச் சொல்லாடலை அணுகுபவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த சொல்லாடல் மூலம் கூற வந்த விடயம் புரியாமல் இருக்கும்.

பொதுவாக Cannibalism என்ற அந்த சொல் நர மாமிசம் உண்ணுதலை – மனிதனே மனிதனை உணவாக உண்ணுவதை – குறிக்கும் என்றாலும், விசேடமாக ஓர் உயிரினம் அதே உயிரினத்தை உணவாக உட்கொள்ளுமாயின் அதையும் Cannibalism என்று கூற முடியும்.

இந்த அர்த்தத்தில்தான் அந்தச் சொல்லாடலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பிரயோகித்திருக்கின்றார்.

சம்பந்தப்பட்ட பால்நிலை சமத்துவ சட்டமூலம் தொடர்பிலான தனது முடிவில் – தீர்ப்பில் – இப்போதைய உயர் நீதிமன்றம், முன்னர் அதே உயர் நீதிமன்றம் வழங்கிய பல தீர்ப்புக்களை புறமொதுக்கி விட்டது, அதே உயர் நீதிமன்றத்தின் அதிக நீதியரசர்களைக் கொண்ட ஆயம் வழங்கிய தீர்ப்புக்களுக்கு மாறாக இப்போது நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்ற குற்றச்சாட்டை வலிமையாக கூறவே அந்த Cannibalism என்ற சொல்லாடலை பயன்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதாவது தனது உயர் நீதிமன்றத்தின் முன்மாதிரித் தீர்புகளை இந்த உயர் நீதிமன்றம் இன்று தின்று தள்ளிவிட்டது என்பதை குறிக்க அவர் Cannibalism என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி இருக்கின்றார்.

அந்தச் சொல்லாடலும் உரையும் நீதித் துறை மீதான தலையீடு என்றாலும், தன் கருத்தை வெளிப்படுத்த சரியான – மிகப் பொருத்தமான – கனகச்சிதமான – கருத்துச் செறிவுடைய – சொற்பிரயோகம் ஒன்றைத்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரயோகித்திருக்கிறார் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசியலில் கைதேர்ந்த விற்பன்னர் – கிழட்டு அரசியல் நரிதந்திர சாலி அல்லவா அவர்?

## ஊடகரின் வீடு மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டன. அதனால் சுமார் 10 இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்றுமுன்தினம் மூவரைச் சந்தேகத்தில் கைது செய்தனர்.

அச்சுவேலி, மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்களையே பொலிஸார் கைது செய்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அங்கு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேகநபர்கள் மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

அதேவேளை, ஊடகவியலாளர் வீட்டில் வைத்து தீ மூட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ என்பவற்றையும், பொலிஸார் மன்றில் பாரப்படுத்தியதை அடுத்து, அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க மன்று அனுமதித்தது.

## நீர்வேலி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரவு 10 மணியளவில் நீர்வேலி, வில்லு மதவடிக்கு அண்மையான பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கைதடிப் பகுதியில் மின்னொளியில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியைப் பார்த்து விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய இளைஞர், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தில் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய கலைப்பிரியன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

## தம் பதவி நீடிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்ற இத்தகைய முயற்சிகளுக்குச் சபாநாயகர் இடமளித்து விடக் கூடாது என்று தாம் நேரத்துடன் எச்சரிக்கின்றார் எனவும் சுமந்திரன் சபாநாயகரைப் பார்த்து நேரடியாகக் கூறினார்.

நேற்றைய நாடாளுமன்றத்தில் குறுக்கீடு செய்து உரையாற்றும்போதே அவர் இந்த விடயங்களை அம்பலப்படுத்தி இருக்கின்றார்.

அவரின் உரையின் சாரம் வருமாறு:-

"இந்த நாடாளுமன்றத்தில் ஒரு துரதிஷ்டவசமான சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. இணையவழிப் பாதுகாப்பு சட்டமூலத்தின் பல பிரிவுகள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கையில், அவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன.

பின்னர் விவாதத்தில் கலந்து கொண்ட நீதி அமைச்சர் அப்படி ஒன்றும் தவறாக நடவடிக்கை நடக்கவில்லை என்று கூறினார்.

ஆனால், அப்படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியம் என்று வலியுறுத்தப்பட்ட குறைந்தது ஆறு விடயங்களாவது மாற்றப்படாமல் அப்படியே சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டமையை நான் அடையாளப் படுத்திக் காட்டினேன்.

உதாரணத்துக்கு இந்தச் சட்டத்தில் ஒரு குற்றம் திரும்பவும் இழைக்கப்படுமானால் தண்டனை இரட்டிப்பு என்று கூறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் அப்படிச் சட்டத்தை நிறைவேற்றுவதானால் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் கட்டாயம் என்று தெரிவித்திருந்தது. ஆனால், அந்த பிரிவு மாற்றப்படாமல் அப்படியே சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டு விட்டது.

உயர்நீதிமன்றத்தின் முடிவை மீறி இவ்வாறு சட்டமாக்கும் நடவடிக்கை இலங்கை சரித்திரத்தில் நடப்பது இதுதான் முதல் தடவை.

இப்போது இரண்டாவது தடவையாக நேற்று (செவ்வாயன்று) ஜனாதிபதி இங்கு வந்து சட்டவாக்கல் விடயத்தில் உயர்நீதி மன்றத் தீர்மானத்தை நாம் பின்பற்றத் தேவையில்லை என்று கூறுகின்றார். இது ஒரு மிக ஸீரியசான போக்கு.

இந்தத் திசையில் அவர் அப்படி விடயங்களை நெட்டித் தள்ளுவதற்கு காரணம் உண்டு. மிக விரைவில் ஜனாதிபதியினதும், நாடாளுமன்றத்தினதும் பதவிக் காலத்தை ஆறு வருடங்களாக நீடிக்கும் திருத்தச் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படப் போகின்றது என்று நாம் சந்தேகிக்கின்றோம்.

பதவிக் காலத்தை 5 வருடத்தில் இருந்து ஆறு வருடமாக்கும் இந்த விவகாரம் அரசமைப்பின் 83 (ஆ) பிரிவுடன் தொடர்புபட்டது. அதனை 19 ஆவது திருத்தத்தின்போது நாம் மாற்ற முயலவில்லை. ஏனெனில் அதைச் செய்வதாயின் அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்பதால் அதை நாம் மாற்ற முயற்சிக்கவில்லை. அப்படியே விட்டு விட்டோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஐந்து வருட பதவிக் காலத்தில் எஞ்சிய காலத்துக்கு மட்டுமே பதவி வகிக்க முடியும்.

இப்போது அந்தப் பதவிக்கால நீடிப்புக்கான சட்டமூலம் நிறைவேற்றப்படுவதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் முடிவு செய்து அறிவித்து விட்டால், அதைச் சமாளிப்பதற்காகவே உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களை – முடிவுகளை – புறந்தள்ளி நடப்பதற்கான முன்னாயத்தங்களை – அதற்கான வழிவகைகளை – இப்போது ஜனாதிபதி நகர்த்துகின்றார்.

நாடாளுமன்றத்தில் உள்ள எம்.பிக்களுக்கு அவர்கள் ஒரு முழு நாடாளுமன்றப் பதவிக் காலம் எம்.பியாகத் தொடர்வதற்கு உறுதியளிப்பதன் மூலம் அவர்களுக்கு ஓய்வூதியம் உட்பட பிற வசதிகள் கிடைக்கச் செய்யலாம் என்ற கையூட்டலைக்காட்டி, அதைப்பயன்படுத்தி, அவர்களை வளைத்துப் பிடித்து, தமது பதவி நீடிப்புக்கு எம்.பிக்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறலாம் என ஜனாதிபதி திட்டமிடுகின்றார்.

இதுதான் அவர் உயர்நீதிமன்றத்தின் முடிவை மீறிச் செயற்படலாம் என்று முன்கூட்டியே இப்போது கருத்துக் கூறியமைக்குப் பிரதான காரணம். இது ஒரு மிகப் பயங்கரமான நிலைமை. இந்த நாடாளுமன்றத்தில் இப்போது புதிதாக உருவாகி இருக்கும் ஆபத்தான சூழல்.

சபாநாயகரே! இது குறித்து நீங்கள் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாடாளுமன்றம் அரசமைப்புக்குக் கட்டுப் பட்டுச் செயற்பட வேண்டும். ஜனாதிபதிக்கோ, நீதித்துறைக்கோ அந்த விடயம் பிரதான பொறுப்பல்ல.

உயர்நீதிமன்றத்தில் இருந்து ஒரு சட்டமூலம் தொடர்பாக ஒரு தீர்மானம் – முடிவு – வந்தால் அது முழுமையாகப் பின்பற்றி கைக்கொள்ளப்பட வேண்டும், இல்லையேல் அந்தச் சட்ட மூலம் சட்டமாக முடியாது. அது அரசமைப்பில் மிகத் தெளிவாக உள்ளது.

எதிர்காலத்தில் வரக்கூடிய ஆபத்தான நடவடிக்கைகளுக்காகவே நேற்று (செவ்வாயன்று) உள்நோக்கத்துடன் அப்படி அச்சுறுத்தும் பாணியில் (ஜனாதிபதியால்) கூறப்பட்டது என்பதை நேரத்துடனே முன்னெச்சரிக்கையாக

இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன்." – என்றார்.

We are HIRING

# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

Walk-in-interview on 22-06-2024

between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**

No-655, Navalar Road, Jaffna.

021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS



Build Your Dream Home with us....

NORTH WALL
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:

- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நரித் தந்திரத் திட்டம் இது!

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர் நீதிமன்றத்தை அச்சுறுத்தும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். உயர்நீதிமன்றத்தின் தீர்மானங்களை - முடிவுகளை - மீறி சட்டவாக்கல் விடயத்தை நாடாளுமன்றம் முன்னெடுக்க முடியும் என்று அவர் மிரட்டி இருந்தார்.

அப்படி அவர் கருத்து வெளியிட்டதன் பின்னணியில் பொதிந்திருக்கக் கூடிய சூத்திரத்தை - தந்திரத்தை - நோக்கத்தை - கரவு எண்ணத்தை - நேற்றுக் காலை முரசு இதழில் இப்பத்தியில் விலாவாரியாக விவரித்துக் கோடிகாட்டி இருந்தோம்.

அதனை உறுதிப்படுத்துமாற்போல, அந்த விடயங்களை அதே கருத்தியலுடன் நேற்று பகல் நாடாளுமன்றத்தில் அப்பட்டமாகவும் பட்டவர்த்தனமாகவும் அம்பலப்படுத்தி இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நேற்றுக் காலை இப்பத்தியின் கருத்தியலிலும், நேற்று சுமந்திரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையிலும் உள்ள பிரதான அம்சங்களை வரிசைப்படுத்தினால் -

+ நாடாளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் பதவிக்காலத்தை மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

+ அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு திரட்டப்படும்.

+ அதற்கு மேல் அந்தத் திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

+அதை மீறி உயர்நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்பை வலியுறுத்தினால், உயர்நீதிமன்ற முடிவைப் புறமொதுக்கி அந்தச் சட்டமூலத்தைச் சட்டமாக்க வேண்டும்.

- இதுதான் அந்த சாரம். சரி, மற்றைய விடயங்களுக்குள் இறங்க முன்னர், அத்தகைய திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை இன்றைய நிலையில் ஜனாதிபதியினால் திரட்ட முடியுமா என்ற கேள்வி எழுகிறது. அதற்கும் தனித் தந்திரத் திட்டம் வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று தெரிய வருகிறது.

இப்போது உள்ள நிலையில் ஒரு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால், வெற்றி பெறுபவர் யார் என்றாலும், அவர் பதவியேற்றதும் முதல் காரியமாக நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பது உறுதி. அப்படி நடந்தால் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் நான்கு வருடங்களுடன் முடிந்து விடும். அதனால் எம்.பிக்கள் தமது ஒரு வருடப் பதவியை இழப்பர். அத்தோடு இம்முறை முதல் தடவையாக எம்.பியானவர்கள் ஐந்து வருட பதவிக்காலத்தை முடிக்காதமையால் எம்.பிக்கள் ஓய்வூதியம் பெறும் தகுதியையும் இழப்பர்.

மாறாக, ரணில் தரப்பு முன்வைக்கும் பதவி நீடிப்பு பிரேரணைக்கு ஆதரவளித்து, அதை வெற்றி பெற வைத்தால், மேலும் இரண்டு வருடங்களுக்கு - அதாவது ஆறு வருடங்கள் - எம்.பி. பதவியில் நீடிக்க முடியும். அதற்கிடையில், இம்முறை இதுவரையில் வழங்கப்படாத, தீர்வையற்ற வாகன உரிமமும் எம்.பிக்களுக்கு வழங்கப்படும் என ஆசை காட்டப்படும்.

இந்தக் கையூட்டுகளுக்காக எம்.பிக்கள் மடங்கி விடுவார் என்பது உறுதி. ஆனால் ஒரு பிரச்சினை. இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாகப் பகிரங்கமாக வாக்களித்தால், அந்த எம்.பிக்கள் பலர் பின்னர் தங்கள் மாவட்டங்களில் தங்கள் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத இக்கட்டு ஏற்படும் என அஞ்சுவர்.

அதைச் சமாளிக்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தந்திரத் திட்டம் வைத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்த உத்தேச சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்படும் போது, நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி, சட்டமூலம் மீதான வாக்கெடுப்பை இரகசியமாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசுத் தரப்பால் முன்வைக்கப்படும். இரகசிய வாக்கெடுப்புக்கு அனுமதிப்பதா என்ற விடயத்தின் மீது பகிரங்க வாக்களிப்பு நடத்தப்படும். நாடாளுமன்றத்தில் இப்போது அறுதிப் பெரும்பான்மையை கொண்டிருக்கும் ரணிலின் அரசினால் அந்த வாக்கெடுப்பில் சாதாரண பெரும்பான்மை மூலம் இலகுவில் வெற்றி பெற முடியும்.

அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் சட்டமூலத்தின் மீது நடக்கும் இரகசிய வாக்கெடுப்பில் தேவையான மூன்றிலிரண்டு பங்கு வாக்குகளைப் பெற முடியும் என்று ரணில் கருதுகிறார்.

45 வருட நாடாளுமன்ற அனுபவம் கொண்ட நரித் தந்திரசாலி ரணில் விக்கிரமசிங்க. மீண்டும் கூறுகின்றோம் - அவர் இதுவும் செய்வார், இன்னமும் செய்வார்.

# இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம்




இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் காலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கைது நடவடிக்கைகள் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு, மீனவர்களுக்கு அச்ச உணர்வும் நிச்சயமற்ற தன்மையும் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது 15 மீனவர்களும் 162 மீன்பிடிப் படகுகளும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தமிழக முதல்வர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமெனவும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, தமிழகம் – கோட்டைப்பட்டினத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நான்கு மீனவர்களும் நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.



# புதுடில்லியில் நாளாந்த மின்சாரத் தேவை வரலாறு காணாத அளவில் அதிகரிப்பு

கடும் வெப்பம் காரணமாக இந்திய தலைநகர் புது டில்லியில் நாளாந்த மின்சாரத் தேவை வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

இவ்வாரத்தில் மின்சாரத் தேவை புது டெல்லியில் 8,647 மெகாவட்ஸ் ஆக அதிகரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் நாளாந்த மின்சார தேவை 4000 மெகாவட்ஸாக காணப்பட்டது.

கடந்த சில மாதங்களாக வட இந்தியாவில் வெப்பம் 45 செல்சியஸ் வரை பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக மக்கள் மின் விசிறிகள் மற்றும் குளிரூட்டிகளை அதிகளவு பயன்படுத்துவதால், மின்சாரத் தேவை அதிகரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வட இந்தியாவில் வரலாற்றில் அதியுயர் மின்சார பாவனையாக 89,000 மெகாவட்ஸ் பதிவாகியுள்ள நிலையில், டில்லியில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

# கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராய குடித்ததில் 14 பேர் உயிரிழந்தனர்

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட கோட்டைமேடு கருணாபுரத்தைச் சேர்ந்தவர்கள் கள்ளச்சாராயம் அருந்திய நிலையில், நேற்று 14 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன் குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். மாவட்ட எஸ்.பி. சமய் சிங் மீனா பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன் மதுவிலக்குப் பிரிவு பொலிஸார் முழுமையாக மாற்றப்பட்டனர்.

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட கருணாபுரம் பகுதியில் நேற்று முன்தினம் முதல் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதை அருந்தியவர்கள் இரவு உடல் நலம் பாதிக்கப்பட்டு கள்ளக்குறிச்சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதையடுத்து, கள்ளச்சாராயம் அருந்தி உடல்நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்தவர்களில் 19 பேர் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பெற்ற வந்தவர்களில் மூவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தனர். மேலும் 16 பேர் அங்கு தொடர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேபோன்று சேலம் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 7 பேரில் மூவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தனர். 4 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



மேலும், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த நால்வர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தனர். நேற்று இரவு 8 மணி நிலவரப்படி 2 பெண்கள் உட்பட 14 பேர் உயிரிழந்தனர். மேலும், 32 பேர் கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம், புதுச்சேரி ஆகிய மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதனிடையே, அப்பகுதியில் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததாக கோவிந்தராஜ் என்பவரை கைதுசெய்து, அவரிடமிருந்து 200 லிற்றர் கள்ளச்சாராயத்தை பறிமுதல் செய்தனர். அதை விழுப்புரம் தடய அறிவியல் சோதனைக்கு உட்படுத்தியதில் மெத்தனால் வேதியியல் பொருள் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



# ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்ட 550 பேர் வெப்பத்தால் உயிரிழப்பு

இவ்வாண்டு ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்டவர்களில் சுமார் 550 பேர் உயிரிழந்துள்ளனர் என சவுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்கள் எகிப்து, ஜோர்தான், இந்தோனேசியா, ஈரான் மற்றும் செனகல் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மெக்கா அருகில் உள்ள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன என சவுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மெக்காவில் உள்ள அல் ஹராம் மசூதியில் சுமார் 51 டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவியதாக சவுதி வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

யாத்திரையின் போது கடும் வெப்பத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளித்து வருவதாக சவுதி அரசாங்கம் அறிவித்துள்ளது.





# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு எதிராக தீவிரமடைந்து வருகின்றன போராட்டங்கள்

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டு மக்கள் கடந்த 17ஆம் திகதியில் இருந்து தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது பணயக்கைதிகளை விடுதலை செய்யுமாறும், தேர்தலை விரைவாக நடத்துமாறும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இப்போராட்டத்தின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வெடித்த வன்முறையில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வன்முறையில் 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது."போரைக் காரணம் காட்டி பொதுத் தேர்தலை 2026 ஆம் ஆண்டு நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளமை அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாட்டில் இராணுவ வெடிபொருள் கிடங்கில் பாரிய வெடிவிபத்து



மத்திய ஆப்பிரிக்க நாடான சாட்டில் இராணுவ வெடிபொருள் கிடங்கில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு சாட் நாட்டின் ஜமீனாவில் உள்ள இராணுவ வெடிபொருள் கிடங்கில் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிவிபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 46 பேர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, அரைமணி நேரத்திற்கும் மேலாக வெடிபொருள்கள் வெடித்ததில் அருகே இருந்த கட்டடங்கள் குலுங்கியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, காயமடைந்த நபர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில், அந்த நாட்டின் அதிபர் மஹமத் டெபி இரங்கல் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், “பாதிக்கப்பட்டவர்களின் ஆன்மா அமைதி பெற வேண்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் மற்றும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்” என குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஒற்றுமையில்லாத இனமாக இருக்கின்றது எம் தமிழினம்

## தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூஜை நிகழ்வில் ஆறு. திருமுருகன் கவலை

(எஸ்.நிதர்ஷன்)

ஒற்றுமையில்லாத இனமாக தமிழினம் இருக்கின்றது என்று கவலை வெளியிட்டுள்ள தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், சமூகத்திலுள்ள அனைவரிடத்தேயும் அனைத்து வழிகளிலும் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 16 ஆவது குருபூஜை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றும்போதே மேற்கண்டவாறு ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தெய்வக் குழந்தையாகப் பிறந்து ஆற்றலிலும் அறிவிலும் வளர்ந்து கல்வியில் முன்னேறி ஆசிரியராகி, பண்டிதராகி, தலைசிறந்த செற்பொழிவாளராகத் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக உயர்ந்தவர் தான் அன்னை சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

சொல்லாலும் செயலாலும் இந்த நாட்டில் சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய இந்தப் பொருமாட்டிக்கு நிகராக எவரும் இல்லையே. அவரது சமய, சமூக சிந்தனையும் மக்கள் சேவையும் அதனையே எப்போதும் வெளிப்படுத்தி இருக்கின்றது.

இன்றைக்கு எத்தனையோ பெண்கள் கல்வியில் முன்னேறியுள்ளார்கள். பல்கலைக்கழகத்தில் இருக்கின்றார்கள். பட்டப்படிப்பு படிக்கின்றார்கள். பாடசாலைகளில் அதிகமானவர்கள் பெண்களாகவே உள்ளார்கள்.

குறிப்பாக தடக்கி விழுந்தாலும் ஆசிரியர் பக்கத்தில்தான் அதுவும் பெண்கள் பக்கத்தில் விழ வேண்டியுள்ளது. மிகப் பெரிய கல்லூரிகள் ஆண் ஆசிரியர்கள் இல்லாது பெண் ஆசிரியர்களால் நிரம்பி வழிகின்றன.

ஆனால், தங்கம்மா போன்றவர்களை இன்னமும் தேட முடியவில்லை என்றளவுக்குச் சமய வாழ்வுக்கோ, துறவு வாழ்வுக்கோ உளப்பூர்வமாகச் சேவை செய்வதற்கு யாரும் எம் மத்தியில் முன் வருபவர்களாக இல்லையே. ஆகையினால் இது பெரும் வெற்றிடமாக இன்றும் உள்ளது.

மேலும் ஒற்றுமையில்லாத இனமாக நாம் இருக்கின்றோம். அவ்வாறு ஒற்றுமை இல்லாததனாலே நாம் அல்லல்படுகின்றோம். இதில் எந்தத் துறையை எடுத்தாலும் ஒற்றுமையில்லாமலே எமது இனம் இருக்கின்றது. அது சமய, சமூக மற்றும் அரசியலிலும் சரி ஒற்றைமையில்லாத நிலையே காணப்படுகின்றது.

அதேபோன்றே மனிதநேயமற்ற சமூகமாக நாம் வாழ்கின்றோம். இவ்வாறு ஒற்றுமை இல்லாமலும், மனிதநேயம் இல்லாமலும் மற்றவர்களை வருத்துகின்ற நிலைமைகள் இருக்கின்றதைப் பார்க்கின்றபோது மிகப் பெரிய கவலையாக உள்ளது.

ஆகவே, எமது சமூகத்தைக் காப்பாற்ற முதலில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு எமது அடுத்த தலைமுறை மனித நேய சிந்தனையுடன் சமய, சமூகப் பொறுப்பை உணர்ந்து இல்லாதவர்களுக்கு உதவுகின்ற மனப்பாங்குடன் நல்லவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அனைவரும் சமூக சிந்தனையுடன் தத்தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது. அதுவே சமூகத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும்." - என்றார். (நிகழ்வில் விவரம் 20ஆம்பக்கத்தில்...)




# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு நிரந்தர பீடாதிபதியை உடன் நியமிக்க வேண்டும்

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி வலியுறுத்து

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் மாணவர்கள் மிக மோசமாக உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் எனவும், உடனடியாக நிரந்தர பீடாதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் மாணவர்கள் மிக மோசமான உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக அங்கு கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் தரப்பிலிருந்தும், அவர்களின் பெற்றோர்கள் தரப்பிலிருந்தும் எங்களுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு ஒரு நிரந்தரமான பீடாதிபதி நியமிக்கப்படாத நிலையில், பதில் பீடாதிபதியின் தலைமையில்தான் அது இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஏன் கல்வியியல் கல்லூரிக்கு ஒரு நிரந்தரமான பீடாதிபதி நியமிக்கப்படவில்லையென்ற கேள்வி இருக்கின்றது. ஆகவே, அந்த மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு அவசரமாக குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சிடம் கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரத்திலே உடனடியாக ஒரு நிரந்தர பீடாதிபதி ஒருவரை அந்தக் கல்வியியல் கல்லூரிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." – என்றார்.





# முன்னாள் எம்.பி. லயனல் பிரேமசிறி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு

முன்னாள் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான லயனல் பிரேமசிறி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டார்.

காலி மஹிந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான அவர், தொழில் ரீதியாக சட்டத்தரணியாவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்த அவர், காலி மேயராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து மீண்டும் காலி மாவட்ட மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

லயனல் பிரேமசிறி 2004இல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து காலி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தார்.

அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து 2007 – 2010 காலப்பகுதியில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன் பிரதி அமைச்சராக அவர் கடமையாற்றினார்.

அவர் கனடாவின் பிரதி உயர்ஸ்தானிகராகவும் சில காலம் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழில் அமைச்சின் புதிய செயலர் பதவியேற்பு

கடற்றொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள நிசாந்த விக்கிரமசிங்க நேற்றுத் தமது அமைச்சில் வைத்துக் கடமைகளைப் பொறுப்பேற்றார். இவருக்கான நியமனக் கடிதம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டது.

முன்னாள் செயலாளர் செல்வி நயனாகுமாரி சோமரத்ன ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத் திற்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஏற்கனவே கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றியுள்ளமையுடன் தெஹியோவிட்ட மற்றும் பசரை பிரதேச சபைகளில் உதவி பிரதேச செயலாளரகவும், பதுளை மாவட்ட சமுர்த்தி ஆணையாளராகவும், ஊவாபரணகம பிதேச சபையின் செயலாளராகவும், ஊவா மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளராகவும், அம் மாகாண சபையின் ஆணையாளராகவும் தெங்கு, அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாகவும், இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமாகவும், காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

ஜயர்தனபுர பல்கலைக் கழகத்தின் வர்த்தகப் பிரிவின் விசேட பட்டதாரியான இவர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் எம்.ஏ. பட்டதாரியுமாவர்.



சர்வ மதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர்களான அனுஷா கோகுல (மனித வள அபிவிருத்தி), அப்சரா நிசங்க( நிர்வாகம்), பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) தம்மிக்க ரணதுங்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கே. அருளானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# 15 வருடங்களுக்கு மேல் சிறையிலிருக்கும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யுங்கள்!

## அவர்களை நேரில் பார்த்த பின் கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை







(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது சர்வதேச விதி முறைகளுக்கு மேலான ஒரு கொடிய சட்டம். புதிய மகஸின் சிறைச்சாலையில் 15 வருடங்களுக்கு மேலாக உள்ள அரசியல் கைதிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ள னர். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய மகஸின் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளை நேற்றுப் புதன்கிழமை நேரில் சென்று சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய மகஸின் சிறைச்சாலையில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அர சியல் கைதியாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மொறிஸ் என அழைக்கப்படும் கிருபாகரன் உள் ளிட்ட அரசியல் கைதிகளை இன்று (நேற்று) புதன்கிழமை சந்தித்துக் கலந்து ரையாடினேன்.

அந்த அரசியல் கைதிகள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி இருக் கின்றனர்.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக அவர்கள் சிறைக் கூடங்களில் வாழ் கின்ற போதும் அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்படாமல் அவர்கள் மீது புதிது புதிதாக வழக்குகள் தொடுத்து அவர்களை சிறைச்சாலைக்குள்ளேயே மரணிக்கச் செய்ய வேண்டும் என்பதன் அடிப்படை யில் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது சர்வதேச விதி முறைகளுக்கு மேலான ஒரு கொடிய சட்டம்.

அவ்வாறான ஒரு சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரி மைகள் பேரவை வழியுறுத்தியுள்ள போதும் இன்று வரை அந்தச் சட்டம் நீக்கப்படாமல் இந்த சட்டத்தின் கீழ் போலியான வழக்குகள் மீண்டும் மீண் டும் தொடரப்பட்டு வரும் நிலை காணப் படுகின்றது.

கிருபாகரன் மீதும் கடந்த வாரம் புதிய வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது.

கடந்த 29 வருடங்களுக்கு முன்னர் 19 வயதில் கைது செய்யப்பட்ட நபர்கள் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு சுமார் 2 ஆயுள் தண்டனை காலம் முடிவடைந் துள்ள நிலையிலும் இன்னும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

எனவே இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை என அவர் மேலும் தெரிவித்தார்.



# மாணவன் தாக்கப்பட்டமைக்கு நீதி கேட்டு திருமலை கப்பல்துறையில் ஆர்ப்பாட்டம்!

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் ரமேஷ் இத்திக்க உதார எனும் மாணவன் கடந்த 14ஆம் திகதியன்று பாடசாலையில் மாலை நேர வகுப்பு முடிவடைத்து வீட்டுக்குச் செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அந்த மாணவனைத் தாக்கியுள்ளனர்.

இச் ல்சம்பவத்திற்கு நீதி கோரி நேற்றுப் புதன்கிழமை காலை அப்பகுதி மக்களும் மாணவர்களும் பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்திற்கு திருகோணமலை வலயக்கல்விப் பணிப் பாளரும், பொலிஸாரும் வருகைதந்து அவர்களுடன் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.









# கோட்டாவை துரத்தியடித்தவர்கள் ரணிலுக்கு எதிராக புதிய கூட்டணி

**எதிர்வரும் ஜனாதிபதி மற்றும நாடாளுமன்ற தேர்தல்களை இலக்காகக் கொண்டு 'மக்கள் போராட்ட முன்னணி' என்ற பெயரில் புதிய கூட்டணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.**

**பல்வேறு உரிமைகளை வலியுறுத்தி அரசியல் போராட்டக்களத்தில் ஈடுபட்டி ருந்த தரப்பினர் - குறிப்பாக கோட்டாபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலக்குவதற்கான போராட் டக்களத்தில் இறங்கிய தரப்பினர் - இப்போது சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் சிலவற்றைச் சேர்த் துக் கொண்டு புதிய கட்டமைப்பில் இணைந்துள்ளன.**

இதன் பிரகாரம், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் மக்கள் போராட்டக்கள அமைப்பின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினருமான வசந்த முதலிகே, மாற்றத்திற்கான இளைஞர் அமைப்பின் செயலாளர் லஹிரு வீரசேகர ஆகியோர் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர்.

மக்கள் பேரவைக்கான அமைப்பின் சட்டத்தரணி நுவான் போபகே, ஊடகவியலாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் தரிந்து உடுவரகெதர உள்ளிட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னிலை சோசலிசக் கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி, சோசலிச மக்கள் கூட்டமைப்பு போன்றனவும் இணைந்துள்ளன.

இந்தப் புதிய அமைப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வசந்த முதலிகே –

"அப்போதைய எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பார்த்தமை போன்று மாற்றம் இடம்பெறவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதுள்ள முறைமையை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார்.

தற்போதைய அபிவிருத்திகளின் கீழ், நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படவில்லை, மக்கள் தமது அன்றாட வாழ்வில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொருளாதார அபிவிருத்திக்காக எந்தவொரு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதிய திட்டத்திலிருந்து விடுபடுவதற்கு பொருளாதார கலந்துரையடால் இடம்பெற வேண்டும். அந்தவகையில், இலங்கையின் எதிர்காலத்திற்காக புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது." – என மேலும் விளக்கமளித்தார்.

புதிய கூட்டணி ரணிலின் ஆட்சிக்கு எதிராகக் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.









### 1,700 ரூபா சம்பள விவகார சர்ச்சை:

# தோட்ட நிறுவனங்களின் மேன்முறையீட்டை விசாரிக்க உயர்நீத்மன்றம் திகதி நிர்ணயம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்ட வர்த்தமானி தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்திய பெருந்தோட்ட நிறுவனங்களின் மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்குமாறு தொழில் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யுமாறும், மனு மீதான விசாரணை முடிவடையும் வரை அதனை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் கோரிப் பெருந்தோட்ட நிறுவனங்கள் வழக்கு தாக்கல் செய்திருந்தன.

எனினும், மேற்படி வர்த்தமானி அமுல்படுத்தப்படுவதைத் தடுத்து, இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்காதிருக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்தது.

இதனை சவாலுக்குட்படுத்தி பெருந்தோட்ட நிறுவனங்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தன.



பெருந்தோட்ட நிறுவனங்கள் சார்பில் சட்டத்தரணி சனத் விஜேவர்தன மனுவினைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, எதிர்வரும் 24 ஆம் திகதி அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சர்ச்சைக் கருத்தை வெளியிட்ட வழக்கில் இருந்து நட்டாஷா எதிரிசூரிய, புருனோ திவாகர விடுவிப்பு

சர்ச்சைக்குரிய கருத்தினை வெளியிட்டனர் என நட்டாஷா எதிரிசூரிய மற்றும் புருனோ திவாகர ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து அவர்களை விடுவிக்க கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக 'சிங்களராவய' அமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் தாக்கல் செய்த வழக்கு தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பௌத்த தர்மத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில், வெறுப்புக் கருத்தை வெளியிட்டனர் என அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கை முன்கொண்டு செல்வதற்கு போதுமான சாட்சிகள் காணப்படவில்லை என சட்டமா அதிபரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

மேற்படி விடயங்களை ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிவான் கோசல சேனாதீர இந்த உத்தரவை பிறப்பித்தார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் நட்டாஷா எதிரிசூரிய வெளியிட்ட கருத்து புருனோ திவாகர உள்ளிட்டவர்களினால் இணையத்தில் வெளியிடப்பட்டது.




# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு நிதி ஒதுக்க முடியாது என நிதி அமைச்சு கைவிரிப்பு

அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க இந்த வருடத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாதென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு போதுமான நிதி கையிருப்பில் இல்லை என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அடுத்த வருடத்தில் நாட்டின் கையிருப்பு வழமை நிலைக்கு திரும்புமாயின், அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுமென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.




# கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதிப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று புதன்கிழமை முதல் தொடர் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் தங்களின் ,

'மாதாந்த இழப்பீட்டுத் தொகையை அதிகரி!', 'பயனுள்ள ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தி, பல்கலைக்கழக சமூகத்திற்குப் பொதுக் காப்புறுதி முறைமையை நடைமுறைப்படுத்தி, ஏற்றுக் கொள்ளப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கு!' போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தின் முன்பாக கொட்டகை அமைத்து சத்தியாகிரக போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இப்போராட்டத்தில் சுமார் 30 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எமது கோரிக்கைகள் 6 வருடமாக இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் கோரிக்கைகள் வெற்றி பெறும் வரை எமது போராட்டம் தொடரும்.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் ஒரு கருத்தையும், அமைச்சர் ஒரு கருத்தையும், இராஜாங்க அமைச்சர் ஒரு கருத்தையும் குழுக்கள் அமைத்து வெளியிடுகின்றனர். ஆனால் எமக்கு எந்தத் தீர்வும் இல்லை.

ஜனாதிபதி இதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஏனைய உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு சம்பளம் வழங்கப் பணம் உள்ளது. எமக்கு வழங்கப் பணம் இல்லை என்று சாட்டுச் சொல்கின்றனர். இதே வருடத்தில்தான் அவர்களுக்கு சம்பளம் வழங்கியுள்ளனர்.- என்றனர்.













# தென்கிழக்கு பல்கலை ஊழியர் சங்கம் சுழற்சி முறையான உண்ணாவிரதத்தில்

(எஸ்.அஷ்ரப்கான்)

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 50 நாள்களாக தாங்களது போராட்டங்களை பல்வேறு வியூகங்களை வகுத்து போராடி வரும் நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று 19 ஆம் திகதி முதல் சுழற்சி முறையான உண்ணா விரத போராட்டத்தையும் சத்தியாக்கிரக போராட்டத்தயும் பல்கலைக்கழக நுழை வாயிலில் ஆரம்பித்துள்ளனர்.

சுழற்சி முறையான உண்ணாவிரத போராட்டத்தில் முதற்கட்டமாக தென் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் மற்றும் எஸ். றிபாயுத்தீன், எம்.எச்.எம். நாஸ ார் ஆகியோர் குதித்துள்ளனர்.

நியாயமான மற்றும் எங்களுக்கு வழங்குவதாக அரசால் வாக்குறுதிய ளிக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை நிவர்த்திக்குமாறு கோரி நாடு முழுவ திலுமுள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த 50 நாள்களாகப் போராடிவரும் இன்றைய சூழலில் அரசும் சம்பந்தப்பட்ட நிருவாகி களும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது எங்களை சாகும்வரையான உண்ணா விரதத்துக்குள் தள்ள எத்தனிப்பது போன்று உள்ளதாக தென்கிழக்கு பல் கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலா ளர் எம்.எம். முகமது காமில் தெரிவித்தார்.





# மைத்திரிபாலவுக்கு எதிரான இடைக்காலத் தடை நீடிப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை தொடர்ந்தும் நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பிற்கமைய, மைத்திரிபால சிறிசேன, கட்சியின் தவிசாளராக செயற்படுவதற்கு எவ்வித சட்ட ரீதியான உரிமையும் இல்லை என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அவர் அந்தப் பதவியை வகிப்பதை தடுத்து உத்தரவு பிறப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது மனுவில் கோரியிருந்தார்.



# அவிசாவளையில் பஸ்கள் விபத்து; மாணவர்கள் உட்பட 30 பேர் காயம்

கொழும்பு – அவிசாவளை வீதியில் ரணால பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்றும், மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 30 பேர்டைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து லபுகமுவ நோக்கி மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸூம், எம்பிலிபிட்டியவில் இருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பஸ்ஸ/ம் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக நவகமுவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுதந்திரக் கட்சியின் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா தெரிவு



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என அக்கட்சியின் தலைமையகத்தைக் கைப்பற்றி கட்சி நிர்வாகத்தை நடத்தி வருவதாகக் கூறப்படும் பிரிவு அறிவித்துள்ளது

அதேசமயம், கட்சியின் பொதுச் செயலாளராக துமிந்த திசாநாயக்கவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் நத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளராக செயற்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை தொடர்ந்தும் நீடித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.





# சிவத்தமிழ்ச் செல்வியின் குருபூசை துர்க்கா தேவஸ்தானத்தில் நேற்று

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 16 ஆவது குருபூசை நேற்றுப் புதன் கிழமை நடைபெற்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ் தானத்தில் தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிரு முருகன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ் சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தேவஸ்தான மண்டபத்தில் நினைவு பேருரைகளும் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் மதகுருமார்கள், கல்விமான்கள், துர்க்காபுர இல்ல மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.














# மரக்கறி, பழங்களின் அறுவடைக்கு பின்னரான பாதிப்பு குறைவடைந்து

மரக்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்பு 25சதவீதத்தால்குறைவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயிர் செய்யப்படும் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் அறுவடையின் பின்னர் ஏற்படும் பாதிப்பை குறைத்துக் கொள்வதற்கு உரிய பரிந்துரைகள் மற்றும் நடை முறைகள் பின்பற்றப்பட்டன.

இந்த பரிந்துரை மற்றும் நடை முறைகளை உரிய வகையில் தொடர்ந்தும் பின்பற்றும் பட்சத்தில் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் அறுவடைக்குப் பின்னரான பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# ஹஜ் யாத்திரைக்குச் சென்ற இலங்கையர் ஒருவர் மரணம்

ஹஜ் யாத்திரைக்குச் சென்ற அக்கரைப்பற்றைச் சேர்ந்த 68 வயதான யாத்திரிகர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என இலங்கையின் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அக்கரைப்பற்று 6, முஸ்லிம் மத்திய கல்லூரி வீதியைச் சேர்ந்த அல்-ஹாஜ் ஆதம் லெப்பே அப்துல் கஃபூர் என்பவர் மாரடைப்பால் இவ்வாறு மரணமடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது ஜனாசா புனித மக்காவில் உள்ள மன்னர் அப்துல் அசீஸ் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஜனாசாவை புனித மக்காவில் அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஞ்சல் முத்திரை விலை அதிகரிக்கும் சாத்தியம்

அஞ்சல் முத்திரை ஒன்றின் விலையை 100 ரூபாவாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முன்மொழிவு திறைசேரியின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு வரை 15 ரூபாவாக இருந்த அஞ்சல் முத்திரையின் விலை தற்போது 50 ரூபாவாக உள்ளது.

அஞ்சல் திணைக்களம் தொடர்ச்சியாக நஷ்டமடைந்து வருவதன் காரணமாக இந்தத் தீர்மானத்தை எடுக்க நேரிட்டுள்ளதாக அனுஷ பெல்பிட்ட குறிப்பிட்டுள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 20.06.2024




இன்று தவறுகள் நேராத வண்ணம் உங்களை நீங்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி முறையாக கவனமாகக் கையாள வேண்டும்.

நீங்கள் இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் பணிகளை முடிக்க வேண்டும். தவறுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்க கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் கலந்து பேச வேண்டும். இதன் மூலம் புறக்கணிப்பு உணர்வு தவிர்க்கப்படும். அது உங்கள் உறவை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

உங்கள் செலவுகளை திட்டமிட்டு சிறப்பாக செலவு செய்ய வேண்டும். இதன் மூலம் இன்றைய தினம் சிறப்பாக இருக்கும்.




புதிய நபர்களின் நட்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இது பின்னர் உங்களுக்கு பயனளிக்கும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் பணிக்கு உரிய பாராட்டு கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

நீங்கள் இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவு சிறக்கும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பணம் செலவு செய்து அதன் விளைவில் திருப்தி அடைவீர்கள்.

பக்திப் பாடல்கள் கேட்பது பயனளிக்கும். ஆரோக்கியம் பராமரிக்கலாம்.




இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். வாழ்வின் உயரத்தை எட்டுவீர்கள். உங்கள் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணிகளை நல்ல தரத்துடன் அளிப்பீர்கள். உங்கள் திறமையின் மூலம் எளிதாக பணியாற்றுவீர்கள்.

நீங்கள் இருவரும் உறவுப் பிணைப்பை வலுப்படுத்துவீர்கள். உங்கள் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும் உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும். திட்டமிட்டு திறமையுடன் செயலாற்ற வேண்டியது அவசியம். புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.

பணியிடத்தில் பணிச்சுமை அதிகமாக காணப்படும். பொறுமையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொள்ளுங்கள். அவர்ஃஅவள் தனிமையை உணராத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். இருவரிடையே மகிழ்ச்சி நிலவ இது மிகவும் அவசியம்.

இன்று கவனமாக இல்லாவிட்டால் பணப்பற்றாக்குறை ஏற்படும். நீங்கள் சரியாக கையாண்டால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளலாம்.




உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள். பொறுமை மற்றும் புத்திசாலித்தனம் பொறுத்து உங்கள் வளர்ச்சி அமையும். உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உறுதியும் தைரியமும் இருந்தால் இன்று வெற்றி பெறலாம். சாதாரண பணிகளை விட இன்று பணிகள் கூடுதலாக இருக்கும்.

உங்கள் துணையுடன் உறவு நல்லுறவாக அமைய அவருடைய கருத்துக்கும் மதிப்பு அளியுங்கள். அவருடன் நட்புணர்வு கொள்ளுங்கள்.

இன்று உங்கள் அதிர்ஷ்டத்தை விட திறமையில் நம்பிக்கை வேண்டும். பணபுழக்கம் சிறப்பாக இருக்காது. என்றாலும் அதனைப் பெரிதாகக் கொள்ள வேண்டாம். நிதிநிலையை மேம்படுத்த முயலுங்கள்.தோல் அரிப்புகளை தடுக்க எண்ணெய் உணவுகளை தவிர்க்கவும்.




நீங்கள் விரும்பியது இன்று நிறைவேறும். உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும் நீங்கள் இன்று மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விட அதிகப் பணிகளை கையாள்வீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்களின் நேர்மையைக் கண்டு உங்களைப் பாராட்டுவார்கள்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இருவரும் இணைந்து திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்சிகளை கண்டு களிப்பீர்கள்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் திறமை காரணமாக உங்கள் சேமிப்பு பல மடங்கு உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று செயல்களை திட்டமிட்டால் சிறப்பாக ஆற்றலாம். உங்கள் மனதில் மகிழ்ச்சி குறைந்தது போல உணர்வீர்கள். அமைதியாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம். சில கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும்.

இன்று கவனச் சிதைவு ஏற்படாத வகையில் பணிகளை ஆற்ற வேண்டும். உங்கள் பணிகளை அமைதியாக விடாமுயற்சியுடன் மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். பேசி தீர்ப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இதனால் பிரச்சினைகள் தீரும். நிதிநிலைமை சுமாராக இருக்கும். சேமிப்பு மற்றும் சிக்கனமாக மேற்கொள்ள வேண்டும்.




இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்றலுடன் செயல் பட வேண்டும். பொறுமையாக செயல்களைக் கையாள வேண்டும். உங்கள் கூடப் பிறந்தவர்களுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

பணி சம்பந்தமாக இன்று பயணம் மேற்கொள்ள நேரும். பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும் என்பதால் புத்திசாலித்தனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். அமைதியாக இனிமையாக உங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்.

இன்று செலவுகள் சிறது அதிகமாக காணப்படும் என்பதால் பணத்தை கவனமாக நிர்ணயிக்க வேண்டும். சிறப்பாக திட்டமிட வேண்டும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை கண்களை பரிசோதித்துக் கொள்ளவது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.06.2024




இன்று உங்களிடம் எதிர்மறை எண்ணங்கள் நிறைந்து காணப்படும். இதனை தவிர்த்தல் நல்ல மன நிலையுடன் காணப்படலாம். உற்சாகமுடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று சற்று மந்தமாகச் செயல்படுவீர்கள். அதனால் பணிகளை முடிக்க தாமதமாகும் கவனமாகப் பணியாற்றினால் முன்னேற்றம் கிடைக்கும்.

சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் சிறந்த பிணைப்பு உருவாகும். இதனைப் பின்பற்றுவதன் மூலம் உறவில் அன்பை வளர்க்க முடியும்.

பண வரவு சுமாராக இருக்கும். பணத்தை எவ்வாறு கையாள்வது என்று புரிந்து கொண்டு சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

அற்ப விஷயங்களுக்காக சிறிது குழப்பமடைவீர்கல். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்காத வண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள். மனதில் நம்பிக்கையுடன் இருங்கள்.




இன்று மிகச் சிறப்பான நாள். உங்கள் அனைத்து முயற்சிகளும் இன்று வெற்றி அடையும். உங்கள எண்ணங்களில் அமைதி வேண்டும்.

உங்கள் பணிகளை அனைவரும் பாராட்டுவார்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும். இதனால் உறவை வலுப்படுத்த முடியும்.

பணபுழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப் படுவீர்கள்.




உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டம் சிறந்தது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். பணியிடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் உங்கள் படைப்பாற்றல் அதிகரிக்கும்.

இன்று நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கையில் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




தற்போதைய நிலையிலிருந்து நீங்கள் முன்னேற நீங்கள் அதிகமாக முயல வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பின்மை உணர்வு அகலும். உற்சாகமாக இருக்க முயலுங்கள்.

நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணிகளை ஒப்படைக்கும் முன் தவறுகள் உள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.

உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். இதனால் நல்லுறவை வளர்க்க இயலும்.

சில கடன்களை அடைக்க வேண்டியிருக்கும். அதனை உடனே செய்வதன் மூலம் பண இழப்பை தடுக்க முடியும். பணத்தைச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டியது அவசியம்.

இன்று தொண்டை வலிக்கான வாய்ப்பு உள்ளதால் குளிர்ந்த நீரைப் பருகுவதை தவிர்க்கவும். தலைவலியை தவிர்க்க அமைதியாக இருக்கவும்.



